[2002 ஏப்ரல் 12

திரு. போளூர் வரதன்: பேரவைத் தலைவர் அவர்களே,...

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, திருப்பூர் நகரத்திலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. ஹேமசந்திரன், என்னுடைய அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். என்னுடைய அறைக்கு வாருங்கள். ஆய்வில் இருக்கிறது. எப்போது எடுத்துக்கொள்வது என்று பேசிக்கொள்ளலாம். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், என் ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள், பேசிக்கொள்ளலாம். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

சென்னை, பெசன்ட் நகர், ஸ்டேட் வங்கியில் நடந்த கொள்ளை முயற்சி குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. ஜி. பழனிசாமி, திரு. சி. ஞானசேகரன், திரு. இ. புகழேந்தி, திரு. ஆர். சக்ரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.. *(குறுக்கீடு)*

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விலை வீழ்ச்சியால் விவசாயிகளும் தொழிலாளர்களும் பாதிப்பு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்திலே தேயிலை விலை வீழ்ச்சி தொடர்பாக 65000 சிறு விவசாயிகளும், இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ராஜு உட்காருங்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறைக்கு வாருங்கள். எப்போது எடுத்துக்கொள்வது என்பதை நான் சொல்கிறேன். *(குறுக்கீடு)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

***திரு. எச்.எம். ராஜு:** தேயிலை விலை வீழ்ச்சி குறித்து நான் கொடுத்த சிறப்புக் கவன ஈர்ப்பை எடுத்துக்கொள்ளாததற்காக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

(இந்த நேரத்தில், திருமதி டி. யசோதா அவைக்குள் வந்துகொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யசோதா, சீக்கிரம் வாருங்கள்.